# வலம்புரி
VALAMPURI

விலை 5-00

சங்கு 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 27 செவ்வாய்க்கிழமை ( 11 - 07 - 2000 ) VALAMPURI ஒலி 204


### மீண்டும் இயங்குகிறது

யாழ். போதனா வைத்திய சாலையின் அதிதீவிரசத்திர சிகிச்சைப்பிரிவு நேற்று முன்தினம் முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதென போதனாவைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### நாளை சந்திப்பு

உத்தேச அதிகாரப்பரவல் சீர்திருத்தம் தொடர்பாக நாளைபுதன்கிழமை, ஈ.பி.டி.பி. ''புளொட்'' ஆகிய கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்திக்கவுள்ளார். (வ)

## புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த ஜனாதிபதி தயாராம்!

### ஜப்பான் நாளேட்டிற்குப் பேட்டி

(கொழும்பு)

எந்தவிதமான முன் நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜப்பானிலிருந்து வெளியாகும் ''அஸத்தி செம்மூன்'' என்னும் பத்திரிகைக்கு ஜனாதிபதி வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார்.

அப்பேட்டியில் (6ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

பல்வேறு சம்பவங்களின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் விபரம்வருமாறு

★ கரும்புலி மேஜர்ஸ்ரீவாணி (சின்னத்தம்பி சாந்தி,மட்டக்களப்பு

★ கலைவாணி (வேலுநாயம் வசந்தா) நெடுங்கேணி (ச-7)

## மீண்டும் யுத்தம் வெடித்தது

# கொழும்புத்துறை; அரியாலையில்

# ராணுவம்-புலிகள் உக்கிர சண்டை!

### அதிகாரி உட்பட 19பேர் பலி! 94பேர் காயம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(அலுவலகநிருபர்)

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும இடையே நேற்று அதிகாலை இடம்பெற்ற உக்கிரமான சண்டையில் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி ஒரு அதிகாரி உட்பட 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 94 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதேவேளை கொழும்புத்துறை அரியாலைப் பகுதிகளில் உள்ள விடுதலைப்புலிகளின் பதுங்கு குழிகளை அழித்துள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 5 மணியிலிருந்து பலத்த எடுப்பிலான பல்குழல் எறிகணைத் தாக்குதல்களுடனும் மற்றும் மோட்டார், பீரங்கித் தாக்குதல்களுடனும் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை இராணுவத்தினர் மேற்கொண்ட போது அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் உக்கிர மோதல் ஏற்பட்டது.

இம்மோதல்களின் போது (6ஆம்பக்கம் பார்க்க)

## மோதல்களை அடுத்து பல இடங்களில் பதற்றம்

கொழும்புத்துறை அரியாலைப் பகுதியில் நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை இடம்பெற்ற மோதல்களின் போது கோவில்வீதிச் சந்தி, பிரதான வீதியில் உள்ள புனித யாகப்பர் ஆலய வளவு, தேசிய பயிலுநர் சபை கட்டட வளவு, வீடமைப்பு அதிகாரசபை ஆகிய இடங்களில் துப்பாக்கிச் சன்னங்கள் வீழ்ந்து (6 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் எம். பி. உட்பட மேலும் சிலர் ஐ.தே.க. மாற்றுக்குழுவில் இணைவு

(கொழும்பு)

புத்தளம் மாவட்ட ஐ.தே. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சாயிதன் இஸ்மாயிலும் மற்றும் சிலரும் ஐ.தே. கட்சியின் மாற்றுக் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகி (6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடா தமிழ் மக்கள் குறித்து உடனடிகவனம் செலுத்தவேண்டும்!

### அமெ.காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள தமிழ் மக்கள் குறித்து உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க காங்கிரஸின் பிரதிநிதிகள் 13 பேர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

யுத்தம் நடைபெறும் யாழ். குடாநாட்டில் சிக்கியுள்ள அப்பாவி தமிழ் மக்கள் குறித்து தாம் ஆழ்ந்த கவனம் செலுத்துவதாகவும் அரசாங்கம் இது பற்றி உடனடிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் அரசைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## போலி அடையாள அட்டை வைத்திருந்த ஆறு பேர் யாழ். நீதிமன்றில் ஆஜர்

போலி அடையாள அட்டைகளை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேரைப் பொலிசார் கைது செய்து யாழ் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்தனர்.

நேற்று முன்தினம் தட்டாதெரு சோதனைச்சாவடியூடாக வரும்போது போலி அடையாள அட்டைகள் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டியே பொலிசார் இவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களான வைத்தியநாதன் தேவானந்த் (வயது 38) அரி (6 ஆம் பக்கம் பார்க்க)

## வீதியில் இறங்கிப் போராடுவோம்

அரசாங்கத்திற்கும் ஐ.தே. கட்சிக்கும் இடையே இணக்கம் காணப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் நகல்த்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப் போவதாக சிங்கள இனவாத அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அரசினதும் ஐ.தே. தேசியக் கட்சியினதும் முக்கியஸ்தர்களே இப்பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

ஏனைய உறுப்பினர்களு (6 ஆம் பக்கம் பார்க்க)

★ செய்மதி மூலமான தொடர்பில்

## தொழில்நுட்பக் கோளாறு திருத்தும் பணியில் நிபுணர்குழு

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு செய்மதி மூலமானதொலைத் தொடர்பை ஏற்படுத்துவதில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதால் அதனைக் கண்டுபிடிக்கும் பணியில் டெலிக்கொம்பொறியியல்வல்லுநர்குழுவொன்று ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செய்மதி மூலமான தொலைத்தொடர்பை ஏற்படுத்தும் ''மென் பொருள் திகழ்ச்சி'' (SOFTWARE) (6 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வடமராட்சியில் பரீட்சை நிலையம்

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களும் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களும் வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் பரீட்சைக் (6ஆம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.பிராந்திய கடற்றொழில் கல்லூரி

# 17வருடத்தின்பின் மீண்டும்இயங்கும்

## பயிற்சி பெறவிரும்புவோர் விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)
யாழ். பிராந்திய கடற்றொழில், கடலக இயந்திர, பொறியியல் கல்லூரி 17வருடகால நீண்ட இடைவெளியின் பின்[1983 ஆம் ஆண்டுக்குப் பின்] யாழ். பிராந்தியத்தில்மீண்டும் நடைபெறவுள்ளது:

எதிர் வரும் ஆவணி மாதம் தொடக்கம் மூன்று மாத காலத்திற்கு நடைபெறவுள்ள இப்பயிற்சிநெறியில் பயிற்சி பெற விரும்பும் மீனவக் கூட்டுறவு சங்கங்களை சார்ந்த குடும்ப அங்கத்தவர்கள் உரிய முறையில் பூர்த்தி செய்த தமது விண்ணப்பங்களைஇம் மாதம் 15 ஆம்திகதிக்குபிந்தாமல்,அதிபர் யாழ். பிராந்திய கடற்றொழில் கடலக இயந்திரப் பொறியியல் கல்லூரி, 671 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சமாசம், பருத்தித்துறை வடமராட்சி கூட்டுறவு சங்கங்களின்சமாசம்,பிரதேச செயலர் அலுவலகங்கள் யாழ். பிராந்திய கடற்றொழில் கல்லூரி,'வலம்புரி' பத்திரிகை பணிமனை ஆகிய இடங்களில் பார்வையிடலாம் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இக்கல்லூரி கடந்த எட்டு மாதகாலமாக கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்தமீனவர்களுக்கு வெளிக்களப்பயிற்சியை நடத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# நகைக் கடைகள் பொலிஸாரால் முற்றுகை

## பெருமளவு நகைகள் மீட்கப்பட்டன

பொரலஸ்கமுவ நகைக் கடை ஒன்றிலும் அதைச் சுற்றியுள்ள வேறுசில கடைகளிலும் இருந்து பெருந்தொகையான தங்க நகைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொரலஸ்கமுவ பகுதியை நேற்று முன்தினம் திடீரென சுற்றிவளைத்துத்தேடுதல் நடத்திய போது 23 இலட்ச ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் 300 மோதிரங்கள்,104 தங்கச் சங்கிலிகள், 350 காதணிகள் என்பவை அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்கிசை, தெகிவளை போன்றபகுதிகளில் அண்மைக்காலமாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்திருந்ததாகவும் இவ்வாறு திருடப்பட்டதங்க நகைகளில் ஒரு பகுதியே தற்போது மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

மேற்படி கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும்,இவர்களிடம் இருந்து கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகள், கத்திகள் என்பவற்றைகைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் இவர்கள் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்னும் சந்தேகமும் வலுப்பெற்றுள்ளது, (உ)

# மாணவரிடையே மன வேறுபாடு

## கொலையில் முடிவுற்றது

(கொழும்பு)
பாடசாலை மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பானது கொலையில் முடிவுற்ற சம்பவம் ஒன்று பதுரேலிய என்னும் இடத்தில் இடம்பெற்றது.

ஒரே வகுப்பு மாணவர்கள் இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும், இதனால் கடுங்கோபம் கொண்ட ஓர் மாணவன் மற்றைய மாணவனை கடுமையாகத் தாக்கியதால் அம்மாணவன் இறந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதுவிடயம் குறித்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது: (உ)

# மண்ணெய் விநியோகம்

(கோப்பாய்)
கோப்பாய் மத்தி விவசாயிகள் சம்மேளனத்தினால், அதன் அங்கத்தவர்களுக்கு தலா 4 லீற்றர் மண்ணெண்ணெய், இரு தடவைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற விநியோகத்தினை இனிவரும் காலத்திலும் மேற்கொள்ள வசதியாக புதிய பங்கீட்டு அட்டையை அறிமுகம் செய்யும் நடவடிக்கையிலும் மேற்படி சம்மேளனத்தினர் தற்போது ஈடுபட்டுள்ளனர். [உ-79]

# ஷெல் சத்தங்களின் மத்தியிலும்

## வழமை போல் செயலகப்பணிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரப்பகுதி நேற்று ஷெல் சத்தங்களால் அதிர்ந்த போதிலும் யாழ். செயலகப் பணிகள் வழமைபோல் நடைபெற்றதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

எனினும் ஊழியர்கள் வழமையை விட நேரத்துடன் வீட்டிற்குச்செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க-03)

# யாழ். பல்கலைக்கழகத்தினரால்

## இம்மாதம் நடத்தப்படும் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பரீட்சைப் பிரிவினரால் இம்மாதமும் அடுத்த மாதமும் நடைபெறவுள்ள பரீட்சைகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி யூலை 17 முதல் 24 ம் திகதிவரை பொதுநிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமாப் பரீட்சையும், யூலை 23-ம் திகதியன்று முதுகல்விமாணி பட்டப்படிப்பிற்கான தகுதிகாண் தேர்வும்,

யூலை 24-ம் திகதி,

உடற்கல்வியியல் டிப்ளோமா கல்வியாண்டு 2000/2001 க்கான புதுமாணவரை தெரிவதற்கான பரீட்சையும்

ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை முதலாம் வருடத்திற்குரிய உடற்கல்வி டிப்ளோமா பரீட்சையும் நடைபெறும்,

ஆகஸ்ட் 15-ம் திகதிமுதல் 21-ம் திகதிவரை இரண்டாம் வருட உடற்கல்வி டிப்ளோமா பரீட்சையும்,

ஆகஸ்ட் 15-ம் திகதிமுதல் 25-ம் திகதி வரை கலை முதலாம் வருட, முதலாம் கல்வியாண்டிற்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சையும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)

# பிறவுண்வீதி

## திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)
நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த 'பிறவுண் வீதி' அண்மையில் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்துகொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் உட்பட பொது மக்கள் பலரும் மகிழ்ச்சிதெரிவித்துள்ளனர்.

பல்வேறு தரப்பினரும் கொடுத்த அழுத்தத்தை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-12)

# திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய நபர் பொதுமக்களால் நையப்புடைப்பு

## யாழ். நகரில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]
திருட்டுச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் நேற்று நண்பகல் யாழ் நகரப் பகுதியில் வைத்து பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது மேற்படி இளைஞர் சுமார் பன்னிரெண்டு சேட்களை மின்சார நிலைய வீதியில் அமைந்திருந்தநடைபாதைவியாபாரி ஒருவரிடம் ரூபா இரண்டாயிரம் வரை விலைபேசியதாகவும் மேற்படி சேட்களை பெற்ற வியாபாரி அவற்றில் ''ஓம் ரெக்ஸ்'' புடவையகத்தில் இலச்சனை இருப்பதை அவதானித்து கடை உரிமையாளரிடம் அவற்றை காண்பித்து உறுதிப்படுத்தினாராம்:

பின்னர் மேற்படி நபர் அவ்விடத்திற்கு வந்ததும் அவரை நடைபாதை வியாபாரக் கடைக்கு அருகில் நின்றவர்கள் அழைத்ததையடுத்து அந்நபர் தப்பி ஓட முயற்சிக்கையில் ஓட்டோ சாரதிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பின்னர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டார்:

கடந்த ஒருவார காலத்திற்கு முன்னர் ஆனைக்கோட்டை சாவக்காட்டுப் பகுதியில் இயங்கி வந்த ''ஓம் ரெக்ஸ்'' புடவையகம் உடைக்கப்பட்டு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்ட சம்பவத்திற்கும் மேற்படி நபருக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை நேற்று யாழ். நகரில் இடம் பெற்ற மற்றும் ஒரு சம்பவத்தில் பெண்மணி ஒருவரின் பணப்பை திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது: (க-03)

# திருத்தி வாசிக்கவும்

கடந்த 9-ஆம் திகதி 'வலம்புரி' பத்திரிகையின் 6ஆம் பக்கத்தில் பிரசுரமான கலாபூஷண விருது பெறுவோர் பற்றிய செய்தியில் இராசசுந்தரமூர்த்தி என்பதற்குப் பதிலாக இரத்தினமூர்த்தி என தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்: (ஆ-ர்)

# வெள்ளத்தினால். 9 பேர் பலி

மகாராஷ்மாநிலத்தில் பலத்த மழை பெய்ததால்வீடுகளும்சுவர்களும்இடிந்துவீழ்ந்த வெவ்வேறு சம்பவங்களில் 9பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை மத்தியரயில் பகுதியும் மேற்கத்திய ரயில் பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த 24மணித்தியாலத்தில் மாநிலத்தில் பலத்த மழை தொடருமென்று வானிலையாளர் தெரிவிக்கின்றனர். (து)

## பாலூட்டும் தாய்மாருக்கான

# திரிபோஷா வழங்கும் திட்டம்

# சீராக அமுல்படுத்த முடியவில்லை

## கட்டணம் வழங்க மறுப்பு

(தென்மராட்சி)
யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு போதியளவில் போஷாக்குணவு வழங்கப்படுவதில்லை. அரசினால் இத்தகையவர்களுக்கு வழங்கப்படும் 'திரிபோஷா'வை கொழும்பில் இருந்து கப்பல்மூலம்கொண்டு வருவதற்கு ஏற்படும் மாதாந்தக் கட்டணமாகிய மூன்று இலட்சத்தை சுகாதாரத் திணைக்களம் வழங்கமுடியாதநிலையில் இருப்பதால் யாழ். மாவட்டத்தில் ''திரிபோஷா' வழங்கும் திட்டத்தை அமுல்செய்ய முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை நாட்டின் தென்பகுதியில் திரிபோஷா வழங்கும்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருவதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் மூலம் அறியப்படுகின்றது:

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் போஷாக்கு நிலை குறைவாகவுள்ள சிறுவர்கள் கர்ப்பிணித்தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நன்மைகருதியும் போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்தினை உதவிவழங்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் எதுவும் செயற்படுத்த முன்வரவில்லை எனவும் கூறப்படுகின்றது:

அதே வேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் போஷாக்கு நிலைபற்றிய ஆய்வு அறிக்கைகளின் வெளிப்பாடுகள் பற்றிய தகவல்களும் வெளிப்படுத்தப்படாமல் இருப்பதாகவும் அறியப்படுகின்றது. (க-77)

# மகா கும்பாபிஷேகம்

(மந்திகை)
வதிரி உல்லிய நொல்லை அம்பாள் தேவஸ்தான நவக்கிரகநூதன பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். [உ-23]

# ஏழாலை மேற்கில் திருட்டு

(யாழ்ப்பாணம்)
15 பவுண் பெறுமதியான நகைகள், இரண்டு லேடீஸ் சைக்கிள்கள், புடவை வகைகள் என்பன நள்ளிரவு வேளையில் திருடப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் ஏழாலை மேற்கில் இடம் பெற்றுள்ளது.

ஏழாலை மகாத்மா அச்சக உரிமையாளர் பே. தெய்வேந்திரம் என்பவரது வீட்டிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டார் விழித்துக்கொண்டதையடுத்து திருடன் பொருட்களுடன் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது: (க)

# பொலிஸார் கொள்ளையர் மோதல்

[கொழும்பு]
ஹொறண என்னும்இடத்தில் பொலிஸாருக்கும் கொள்ளைக்கும்பல் ஒன்றுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் கொல்லப்பட்டனர்.

ஹொறண என்றஇடத்தில் கொள்ளைக்கும்பலைச் சேர்ந்தவர்கள் ஒளிந்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் அப்பகுதியில் தேடுதல் நடத்திய வேளையில் மேற்படி மோதல் மூண்டதாக சொல்லப்படுகிறது.

இச்சம்பவத்தில் கொள்ளைக்கும்பலைச் சேர்ந்த பலர் காயமடைந்தனர்; [உ]

# நியமனம்

[வல்வெட்டித்துறை]
அல்வாயைச் சேர்ந்த நடேசு துரைராஜா [ஜே.பி] வடமராட்சி விவாகப் பதிவாளராக நியமனம் பெற்றுள்ளார் (உ-16)

# வெள்ளைப் பூரான் தீண்டியது

(அச்சுவே )
கல்லுடைக்கும் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் வெள்ளைப் பூரானினால் கடியுண்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி தொழிற்சாலையில் தொழில் புரியும் இந்நபர் கல்லுடைக்கும் இயந்திரத்திற்குள் கற்களை போட்டுக் கொள்வதற்காக கற்குவியலில் இருந்து கற்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த சமயமே கல்லுக்குள் ஒளிந்திருந்த வெள்ளைப் பூரானினால் இவர் கடியுண்டுள்ளார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டு கருணாகரன் (வயது32) என்றஇளம் குடும்பஸ்தவரே இவ்வாறு வெள்ளைப் பூரானினால் கடியுண்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (க-14)

### பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும்

# அரிசி தரமற்றது எனகுற்றச்சாட்டு

# கூட்டுறவு ஊழியர் கடும் கண்டனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசி தரமற்றதாக இருப்பதாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச் சாட்டினை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண அரச அதிபர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் கூட்டத்தில் வன்மையாகக் கண்டித்துள்ளனர்;

இது பற்றி மேலும் தெரியவந்துள்ளதாவது பொது மக்களுக்கு விநியோகம் செய்யவெனகொழும்பில் தருவிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற அரிசியையே கூட்டுறவுச்சங்கங்கள் விநியோகித்து வருவதாகவும், வேறு எந்த வகையையும் சங்கங்கள் வழங்குவது இல்லை என தலைவர்கள் அரச அதிபருக்கு தெட்டத் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தனர்.

அத்துடன் உணவுக்களஞ்சியத்தில் அரிசி இறக்கி ஏற்றும் சமயங்களில் கீழே வீழ்கின்ற அரிசியை அரச அதிபர் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றார். என்ற குற்றச்சாட்டினையும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் குறித் தகூட்டத்தில் மறுத்துரைத்திருந்தனர் எனவும் அறியப்படுகின்றது.

மேலும், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற திட்டாத அரிசி வழங்குவது மக்களின் போஷாக்கு நிலையை அதிகரிக்கச் செய்யும் ஒரு காரணமே என்றும், தவிட்டுடன் கூடிய அரிசியை மக்கள் உட்கொள்ளச் செய்வது சுகாதார நோக்கில் நல்ல அம்சம் என்பதை யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் குறித்த கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கூட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் உட்பட பிரதேச செயலர்களும் பங்குபற்றியிருந்தனர் என்பது குடுப்பிடத்தக்கதாகும்.. (க-77)

## புதுப் பொலிவு பெறும் இராணுவ முகாம்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் இராணுவ முகாம்கள் பரவலாக புதுப் பொலிவூட்டப்பட்டுவருகின்றன.

இராணுவ முகாம் இருப்பதை இனம் காண்பதற்கான அறிவித்தல் பலகைகள், மற்றும் வாகன வேகங்களை கட்டுப்படுத்தக்கூறும் அறிவித்தல்கள், வாகன வேகங்களை குறைக்கும் விதிமுறைகள் போன்றவை புதிதாக அமைக்கப்பட்டு வருவதுடன். வர்ண தீந்தைகளும் பூசப்பட்டு வரப்படுகிறது. (க-12)

### காவத்தையில்

## இந்து ஆலயம் அமைப்பதில் சர்ச்சை புதிய இடத்தை தேர்ந்தெடுக்க பணிப்பு

(கொழும்பு)

மலையகப் பகுதியில் காவத்தையில் இந்து கோயிலை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடம் பற்றிய சர்ச்சைகள் ஏற்பட்டிருப்பதனால்பொருத்தமானவேறு ஒரு காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

காவத்தை இந்துமகாசபையினர் தமிழ் வித்தியாலயத்திற்கு அண்மையில் விலை கொடுத்துவாங்கிய காணியில் கோயில் அமைக்க நடவடிக்கை எடுத்தார்கள் ஆனால் தடங்கல்கள் ஏற்பட்டதனால் பாராளுமன்ற உறுப்பினர் ராஜன் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

தோட்ட உட்கட்டு அமைச்சநை நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்த தன் பேரில் தோட்ட நிருவாகம் புதிய காணியைத் தெரிவு செய்யுமாறு -இந்துமகாசபையைக் கேட்டுக்கொண்டது எனத் தெரியவருகிறது. (து)

### நாடாளுமன்ற தேர்தலின்போது

## புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி பொதுமேடைப் பிரச்சாரத்துக்கு தடை

விரைவில் நடைபெறவுள்ள பதினொராவது பாராளுமன்றத்தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசியல் வாதிகள் பொதுமேடைகளில் பிரச்சாரம் செய்ய முடியாது என்றும் தொலைக்காட்சி, வானொலிகள் மூலமாகவே பிரச்சாரம் செய்யவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸ்ஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரங்களின் போது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்; (ச)

### சிறப்புடன் இடம் பெற்ற

## தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் 35வது நினைவு தின வைபவம்

(புலோலி)

தென்புலோலியூர் தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரின் 35 வது நினைவு தின வைபவம் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ. எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் அண்மையில் புலோலியில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை அரசினர்வைத்தியசாலைமாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும் பெருமான் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் ஏ. நடராஜா சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் எஸ். சாள்ஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

யாழ், பல்கலைக் கழக பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர். உருத்திரா இளைப்பாறிய புற்றளை மகாவித்தியாலய அதிபர் சி. ரீ. தர்மலிங்கம் பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி ஆகியோர் புலோலிச் சந்தியிலுள்ள கந்த முருகேசனார் சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்தனர்; (க-[illegible])

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வீடமைப்பு

(நெல்லியடி)

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யா/ தேவரையாளி இந்துக்கல்லூரியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு போருட் நிறுவனம் வீடுகளை அமைத்து வருகிறது.

அங்கு தங்கியுள்ள 55 குடும்பங்களில் 10 குடும்பங்களுக்கே தற்போது நெல்லியடி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் வீடுகள் அமைத்து வருகின்ற போதிலும் ஏனைய குடும்பங்களுக்கும் வெகுவிரைவில் வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது! (க-18)

## 50 இலட்சம் இழப்பீடு

அண்மையில் இரத்மலானைப் பகுதியில் இடம் பெற்ற குண்டுத்தாக்குதலினால் கொல்லப்பட்ட அமைச்சர் சி.வி. குணரெத்தினாவின் பிள்ளைகளுக்கு அரசாங்கம் 50 இலட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்கியுள்ளது;

இக்குண்டுத்தாக்குதலில் அமைச்சரின் மனைவியும் கொல்லப்பட்டமை தெரிந்ததே. இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஏனையோரின் குடும்பங்களுக்கும், சிலதினங்களுக்கு மூன் இழப்பீடுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறுமி உயிரிழப்பு

நியுமோனியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 9 வயதுச் சிறுமி ஒருத்தி ஒட்சிசன் வாயு இன்மையால் மல்லாவி வைத்திய சாலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வைத்திய சாலையில் ஒட்சிசன் இல்லாமையால் இந் நோயினால் பாதிக்கப்படும் மேலும் பலர் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாக மல்லாவி வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி யமுனா நந்தா தெரிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## மா விநியோகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிறுவனங்களில் பங்கீட்டு அட்டைக்கு ஒரு குடும்பத்திற்கு பத்துக்கிலோ மாவும், நான்கு லீற்றர்மண்ணெண்ணெய்யும் விநியோகிக்கப்பட்டுவருகின்றது; (உ-14)

# பாராளுமன்ற உறுப்பினரது வீட்டிற்கருகே குண்டுகள் மீட்பு

### ரஜவலவில் சம்பவம்

(கொழும்பு)

ரஜவல பாராளுமன்ற உறுப்பினரது வீட்டிற்கருகே இருந்து குண்டுகள் மற்றும் வெடிப்பொருட்களை குற்றத் தடுப்பு புலனாய்வுப் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்;

பாணந்துறைப் பகுதியில் வெடிப்பொருட்கள் விற்பனை செய்யும் ஒருவரை கைது செய்து விசாரணை செய்த போதே மேற்படி ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்ட விடயம் தெரியவந்துள்ளதாக குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிகள் மற்றும் கைக் குண்டுகள் உட்பட பல வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டவற்றில் அடங்கும் எனத் தெரியவந்துள்ளது; (உ)

## ஆங்கில தினப் போட்டிகள்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகட்கிடையேயான ஆங்கில தினப்போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 12ம் திகதி புதன் கிழமையும், 15ம் திகதி சனிக்கிழமையும் காலை 9. 00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-79)

### பிறப்புச் சான்றிதழ் இன்றி

## ஆயிரத்திற்கு மேற்பட்டோர் வலிகாமத்தில் கல்வியயில்கின்றனர்

(இணுவில்)

வலிகாமம் கல்விவலயத்தில், சுமார் ஆயிரம் பிள்ளைகள் பிறப்புச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்காது பாடசாலைகளில் கல்விகற்றுவருவதாக தெரியவருகிறது

பெற்றோரின் வறுமைநிலை மற்றும் பிள்ளைகளின் கல்வி பற்றிய கவனம்இன்மைகாரணமாக பிறப்புச்சான்றிதழ் இதுவரை பெற்றுக்கொள்ளாத மேற்படி மாணவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு வலிகாமம் கல்விவலயம் உரிய நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது.

இந்தவகையில், பிறப்புச் சான்றிதழ் இல்லாத மாணவர்களது பெயர் விபரங்களை திரட்டும் பணியில் வலிகாமம் கல்விவலயம் தற்போது ஈடுபட்டுள்ளது. (உ-49)

## திருப்பணி வேலைகள் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

பலவருடங்கள் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாதிருந்த ஊர்காவற்றுறை கரம்பொன் மேற்கு, தேவன்கணைப் பிள்ளையார் கோவில் திருப்பணி வேலைகள் தற்போது இடம்பெற்று வருகிறது. (உ-75)

## குடாநாட்டில் தொற்றுநோய் அபாயம் சுகாதாரத்தைபேணுமாறு அறிவுறுத்தல்

யாழ். குடாநாட்டில் நிலவிவரும் கடும்வெப்ப சூழ்நிலை காரணமாக மக்கள், பல்வேறு தொற்றுநோய்களுக்கும் இலக்காகும் அபாயம் தோன்றியுள்ளது.

தற்போது காய்ச்சல், கண்நோய், மற்றும் தோல் வியாதிகள் பரவலாக மக்களைப் பீடித்திருப்பதனை அவதானிக்கமுடிகிறது.

இடம்பெயர்ந்த மக்கள் செறிந்துவாழும் பகுதிகள், மற்றும் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளோர் மத்தியில் இந்நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் அபாய நிலை காணப்படுவதனால், பொது மக்கள் அனைவரையும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு சுகாதார சேவை வட்டாரங்கள் கோரிக்கை விடுத்துள்ளன; (உ-106)

## உடுபுடவை வழங்கல்

இடம்பெயர்ந்து உரும்பிராய் அன்னைபூபதி நினைவு மண்டபத்தில் தங்கியுள்ள சுமார்15 குடும்பங்களுக்கு, கொண்டாவில் சத்தியசாயி மண்டலியினரால்உடுபுடவைகள் வழங்கப்பட்டது. [உ-14]

### அரியாலைப் பகுதியில்

## தொடரும் திருட்டுக்களால் பொதுமக்கள் கடும் அதிருப்தி

தற்போதைய யுத்த சூழ்நிலையால் அரியாலைப் பகுதியில் இருந்து வெளியேறி உள்ள பொது மக்களின் வீடுகளில் திருட்டுக் கோஷ்டியினர் தொடர்ந்தும் தமது கைவரிசையைக் காட்டி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக் கோஷ்டியினர் பொது மக்களின் வீடுகளில் உள்ள மரத்தளபாடங்கள் மற்றும் கதவுகளை உடைத்து. விறகாக்கி விற்பதுடன் சில வீடுகளில் ஓடுகளையும் கழற்றி விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## சட்டவிரோத மின்பாவனை பெறுவோர் கோப்பாயில் வெகுவாக அதிகரிப்பு

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியில்சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

பொறுப்பற்ற இத்தகைய நடவடிக்கைகளால் பெருமளவு மின் பாவனையாளர் சீரான மின் விநியோகத்தை பெற முடியாது பெரும் சிரமம் அனுபவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சம்பந்தப்பட்டோரின் வீட்டு மின் இணைப்புகள் மின்சார சபையினரால் துண்டிக்கப்பட்டு வருவதாகவும் வயர்கள் கொண்டு செல்லப்படுவதாகவும் மின்சார சபை ஊழியர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் இது விடயத்தில் சீரான ஒத்துழைப்பு வழங்காவிட்டால் தமது கடமைகளை சரிவர செய்ய முடியாத நிலை ஏற்படுமென மேற்படி சபை உத்தியோகத்தர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது; (க-79)

# கிறிஸ்தவ தேவாலய குண்டுவெடிப்பு

# யாரையும்குற்றம்சாட்டபோவதில்லை

## கர்நாடக முதல்வர் தெரிவிப்பு

(பெங்களூர்)

கர்நாடகத்தில் நேற்று முன்தினம் கிறிஸ்தவ தேவாலயம் மீது நடைபெற்ற குண்டுவெடிப்புக்கு எந்த அமைப்பையும் ஆதாரமில்லாமம் குற்றம் சாட்டப்போவதில்லையென்று அம்மாநில முதலமைச்சர் கிருஷ்ணா கூறியிருக்கிறார்.

பெங்களூரில் கிறிஸ்தவ வழிபாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர் கர்நாடக மாநிலம் வளர்ச்சிப்பாதையில் செல்வதைக் கண்டு பொறுக்கமுடியாத சிலர் தமது அரசுக்கு அவதூறு ஏற்படுத்த மேற்கொண்ட சதியின் விளைவே என்று அவர் குறிப்பிட்டார்.

மனித சமுதாயத்துக்கு எதிரான இத்தகைய குற்றச் செயல்களை புரிவோர் மீது அரசு தயக்கமின்றி நடவடிக்கை எடுக்குமென்று அவர் குறிப்பிட்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## உலக தரிசனம்

# குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததில் 17 பேர் பலி; 50 பேரை காணவில்லை

## பிலிப்பைன்சில் சம்பவம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் குப்பைமேடொன்று சரிந்து வீடுகளுக்கு மேல் வீழ்ந்ததில் 17 பேர் கொல்லப்பட்டனர். 50 பேரைக் காணவில்லை.

கடந்தவாரம் பெய்த பலத்த தொடர்மழை காரணமாகவே இக்குப்பைமேடு சரிந்ததாக கூறப்படுகிறது.

இதேசமயம் பம்பாயில் மையம் கொண்டுள்ள கடும் புயல் காரணமாக கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 12 ரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இந்தியா நிராகரிப்பு

பாகிஸ்தான் அரசினால் விடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான அழைப்பினை மீண்டும் இந்தியா நிராகரித்துள்ளது.

ஜிகாத் என்ற புனிதப் போருக்கு ஆதரவு, எல்லைக் கப்பாலிருந்தானபயங்கரவாதம் என இவை இரண்டையும் பாகிஸ்தான் கடைப்பிடிக்கும் வரை இருநாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என இந்தியா மறுத்துள்ளது. [உ]

# ஈரானில் பல்கலைக்கழக மாணவருடன் பழங்கோட்பாட்டாளர் மோதல்

(தெஹரான்)

ஈரானில் பழங்கோட்பாட்டாளர்களுக்கும், புதிய சீர்திருத்தக்கொள்கையுடைய மாணவர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் ஷெஷான் பல்கலைக்கழகத்தில் மோதல்கள் மூண்டிருப்பதாக தெரியவருகிறது.

கடந்தவருடம் மாணவர் விடுதியில் இடம்பெற்ற கலவரங்களில் உயிநீர்த்தமாணவர்களினை நினைவுகூரும் வகையில் மேற்படி பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட அமைதிபூர்வமான நிகழ்வில் இடையில்புகுந்து பழங்கோட்பாட்டாளர்கள் இடையூறுகள் புரிந்ததாகவும்,

இதனால் இருசாராருக்கும் இடையேயான மோதல்நிலை உருவாகி, கற்களாலும் வேறுபொருட்களாலும் தாக்குதல்கள் நடாத்தியதாகவும் தெரியவருகிறது.

எனினும், பொலிஸார் உடன்விரைந்து கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டதன் காரணமாக உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களில் பலரை பொலிஸார் கைது செய்து தொடர்ந்தும் தடுத்துவைத்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும்தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)

# சீனாவில் கோர பஸ்விபத்தில்

# 70 பேர் பலி! 18 இற்கும் மேல் காயம்

(பீக்கிங்)

சீனாவில் இடம்பெற்ற இருவெவ்வேறு பஸ் விபத்துக்களில் சுமார் 70 பேர் வரையில் கொல்லப்பட்டனர். 18 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

தென்சீனாவில் நிலவும் சீரற்ற காலைநிலைய அடுத்து வீதியில் சென்ற பஸ் ஒன்று ஆற்றில் பாய்ந்ததை அடுத்து 50 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாகவும் பெருமளவு சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது மீட்பு பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் வடசீனாவில் இடம்பெற்ற பஸ்விபத்து ஒன்றில் 17 பேர் உயிரிழந்தனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும் மேலும் அறியப்படுகிறது.

கடந்த ஒருசில வருடங்களாக இடம்பெற்ற மிகப் பெரிய விபத்து இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

## அமைச்சர் பதவி நீக்கம்

பீஹாரில் லொறிச்சாரதி மற்றும் நடத்துநரின் கொலை தொடர்பாக அம் மாநில கூட்டுறவுத்துறை துணை அமைச்சர் லலித்யாதவ் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பதவி நீக்க உத்தரவு, பீஹார்மாநில ஆளுநர் ராப்ரிதேவியின் பணிப்பின் பேரில் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் லலித்யாதவ் வீட்டின் வெளியார் விடுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை சித்திரவதை செய்து கொல்லப்பட்டதன் அடையாளங்களுடன் லொறிச்சாரதி அதன் நடத்துநர் ஆகியோரது சடலங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளின் பின்பே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ராஷ்டிரிய ஜனதாதள உறுப்பினர் பதவியில் இருந்து அவரை உடனடியாக நீக்குமாறும் எங்கிருந்தாலும் தேடிக்கண்டுபிடித்து கைது செய்யுமாறும் மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. (உ)

## இசுப்திப்பரல்

★ சிங்கப்பூரில் இளம் பராயத்திலேயே திருமண வாழ்வை தொடங்க மருத்துவ ஆலோசனைகள் அரசு வழங்கவுள்ளதாக சொல்லப்படுகிறது.

★ கடந்த ஆண்டு விமானம் கடத்தியவர்களை பாகிஸ்தான் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சார்க் நாடுகள் மூலமாக இந்தியா கேட்டிருக்கிறது.

★ கிரிக்கெட் பந்தை பழுதாக்கியதற்காக பாகிஸ்தான் வீரர் நேற்று இலங்கையில் விலக்கப்பட்டதுடன் அபராதம் கட்டவும் பணிக்கப்பட்டார்.

★ ஜம்மு காஷ்மீர் சுயாட்சி விவகாரத்தை ஊடகத்துறையினரே பெரிதுபடுத்தி திரித்துள்ளனர் என முதல்வர் பாரூக் அப்துல்லா தெரிவிப்பு.

★ ஆளும் இராணுவ ஆட்சி பர்மாவில் மியான்மார் அஸ்தமனம் எனவும் புதிய ஜனநாயகம் உதயம் என்றும்சொல்லப்படுகிறது.

★ சீனாவில் சோதனைக் குழாய் மூலம் விலங்குகளை உருவாக்கும் 18 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (து)

### பிஜியில் தொடரும் பிணைக் கைதிகள்

# விவகாரத்திற்கு விரைவில் முடிவு

# ஒப்பந்தமும் கைச்சாத்தானது

(சுபா)

பிஜியில் தொடரும் பிணைக் கைதிகள் விவகாரத்தை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் இராணுவத் தலைவர்களும் கிளர்ச்சிக் குழு தலைவர்களும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இவ் ஒப்பந்தத்தையடுத்து பதவியிலிருந்து நீக்கப்பட்ட மகேந்திர சௌத்திரி உள்ளிட்ட 27 கைதிகள் வியாழக்கிழமை விடுவிக்கப்படவுள்ளனர்.

அதேவேளை கிளர்ச்சிக்காரர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

பிஜியின் பழங்குடி இனத் தலைவர்களின் கிரேற் கவுன்சில் என்ற அமைப்பு புதிய அதிபரையும் இடைக்கால அரசையும் தெரிவு செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஜியின் இந்திய வம்சாவழியினர் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என விரும்பும் ஜோர்ச்பெயிட் அவர்கள் புதிய நிருவாகத்தில் தன்னுடைய குழுவிற்கு பிரதிநிதித்துவம் இருக்குமென எதிர்பார்க்கிறார்.

இந்த இணக்கத்தின் படி எவரும் வெற்றியடையவுமில்லை தோல்வியடையவுமில்லை என்று அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கிளர்ச்சி ஆரம்பித்து ஒரு வாரமாகியும் அரசாங்கப் பொறுப்பை ஏற்ற இராணுவம் பெருமளவு விட்டுக் கொடுக்க வேண்டி வரும் என்று பி.பி.சி செய்தியாளர் தெரிவித்துள்ளனர். (க-து)

# இஸ்ரேலியகூட்டரசாங்கத்தில்பிளவு;

# ஆதரவுக் கட்சி ஒன்று விலகியது

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் கூட்டரசாங்கத்தில் இருந்து கட்சி ஒன்று விலகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்கு சமாதான பேச்சுக்களில் கலந்து கொள்ளப்போவதாக இஸ்ரேலிய பிரதமர் எஹிட்பராக் அறிவித்ததையடுத்து அரசுக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் வலதுசாரிக் கூட்டணியில் இருக்கும் கஷோ குடிவரவாளர் கட்சி விலகியிருப்பதாக தெரியவருகிறது.

இதேவேளை, ஆளும் கூட்டணியில் அங்கம்வகிக்கும் மற்றொரு கட்சியான தேசிய கட்சியும் ஆளும் கூட்டணியில் இருந்து விலகப் போவதாக எச்சரிக்கை விடுத்திருப்பதுடம் அதற்கான கால அவகாசத்தையும் குறிப்பிட்டுள்ளது.

பிரதமர் எஹிட்பராக் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வது தொடர்பாக தனது அமைச்சர்களுடன் கலந்தாலோசிக்காது தன்னிச்சையாக முடிவெடுத்தமையே கூட்டணிக் கட்சிகளின் இத்தகைய முடிவுகளுக்கு காரணம் என நம்பப்படுகிறது.

கட்சிகள் எடுக்கும் இவ் விலகல் முடிவால் ஆளும் கூட்டரசாங்கத்தின் பலத்திற்கு ஆபத்து ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

எஹிட்பராக்கின் மேற்படி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அமைச்சர் ஒருவர் கடந்தவாரம் தனது பதவியை இராஜினாமாச் செய்தமையும் தெரிந்ததே. (உ)

## ஒப்பந்தத்தில் கைச்சாத்திட காத்திருப்பு

தாய்வானில் சிங்கப்பூர் பங்குச் சந்தைகள் வர்த்தக கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடத்தம் நாட்டு அரசாங்கங்களின் அனுமதிக்காக காத்திருக்கின்றன.

மேற்கண்டவாறு தாய்வானின் பங்குச் சந்தைகளின் தலைவர் தோமஸ் கே. கே. ஐக் கூறியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கங்கள் அனுமதி வழங்கினால் தாய்வானில் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் அதே நிறுவனத்தின் பங்குகளை தத்தம் நாட்டு பணங்களிலே வழங்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. [து]

### நாமக்கல் மாவட்டத்தில்

# எய்ட்ஸ் நோய்க்கு 14பேர் பலி

# 10ஆயிரம் பேர் வரையில் பாதிப்பு

## மருத்துவ வட்டாரங்கள் அதிர்ச்சி

[சென்னை]

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களுள் 14பேர் எய்ட்ஸ்நோய்க்கு பலியாகியுள்ளதாகவும் 10 ஆயிரம் பேர்இந்நோய்க்கு ஆளாகியுள்ளதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் நாமக்கல் மாவட்டத்திலேயே அதிகளவு எய்ட்ஸ் நோயாளர்கள் காணப்படுவதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இங்கு பஸ்கள் மற்றும் கனரக வாகனங்களில் பணியாற்றும் பஸ் சாரதிகளே கூடியளவு எய்ட்ஸ்காவிகளாக உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. [க-தி]

இகலென்பஎல்லாஉயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்

- குறள்

# வலம்புரி

## வரம்பு மீறி

கல்விச் செயற் பாடுகளுக்கு உயிரையும் கொடுக்க முனையும் மண் வடபுலம். எங்களால் என்றும் இழக்க முடியாததும் கல்வியே. இடப் பெயர்வால் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அவற்றைப்போக்கசம்பந்தப்பட்டோர் விரைவாக ஆவன செய்தாக வேண்டும்.

பாரம்பரியம் என்றைக்கும் பேணிக்காக்கப்படும் நிலையில் பேதமற இயங்க வேண்டிய நிலைப்பாடு வேண்டும். மதம் மனிதனை மதம்பிடித்தவனாகவோ உண்மையைப்புரிய மறுப்பவனாகவோ ஆக்குமானால் அதனால் எவ்வித பயனும் இல்லாமற் போய் விடும். வேடதாரிகள் மட்டுமே என்ற வேண்டாத கூற்றுக்குஇடமளித்து விடுவர்.

உயிர் மூச்சொடு உண்மை உழைப்பைக் கொடுக்க முனைபவர் நாட்டிற் சிலரே. அதனால் பார்வையாளர்க்கு அத்தகையவர் விநோதமான பிரகிருதிகள் போற் காட்சியளிக்க நேரிடும்.

வரம்புமீறிய தண்ணீர் பயனற்றுப்போகும். அவ்வாறுவரம்பு மீறிய செயற்பாடுகள். தொண்டாக இருந்தாலென்ன, சமயசம்பந்தமாக இருந்தாலென்ன வரவேற்க முடியாததே.

இடம்பெயர்வின்போது பல்வேறு உருவங்களில் கல்விக்கு முட்டுக்கட்டைகள் போடப்பட்டுள்ளன. மீண்டுமொரு போத்துக்கீசர்காலம் மூளை விடுகிறதோ என்று எண்ணுமளவிற்கு நிலமைகள் கட்டுமீறிய சந்தர்ப்பங்களும் உண்டு. இவையாவும் சமயத்தின் போர்வைக்குள் நிகழுமானால் அதைவிட துரோகம் வேறில்லை.

தாய் பசித்திருந்தாலும் களவு கூடாது என்கிறது வள்ளுவம் செவிக்கு உணவில்லாத போது தான் சற்று வயிற்றுக்கும் ஈய வேண்டும். கல்வியை முதனிலைப் படுத்தியே அனைத்துச் செயல்களும் நடைபெற வேண்டும். கல்வியைப் புறக்கணித்து எச்செயல் செய்தாலும் எங்கள் மண் தாங்காது. முன்னின்று உழைப்பவர் இதனை நன்குபுரியவேண்டும்.

நாட்டிலே நிகழும் அனர்த்தங்களால் மனித உள்ளங்கள்பக்குவப்பட்டபாடில்லை. சுடச்சுட ஒளிரும் பொன் என்றனர். கருங்காலிகள் போல் தபோதிகள் போல் புனித இடங்களை யுத்தகளமாக்கக்கூடாது. அதற்கும்உரிய இடங்களுக்கு நகர்ந்தால் முடிவு விரைவுபடுத்தப்படும்.

- அன்புடன் ஆசிரியர்

# இடம்பெயர்வுகள் மக்கள் மத்தியில்

# வழமையான நிகழ்வாகி விட்டன

## வட-பிராந்திய முன்னாள் தலைவர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

இடம்பெயர்வுகள் இப்போது எம் பிரதேசத்து மக்கள் மத்தியில் ஒரு வழமையான நிகழ்வாகி வந்துவிட்டது. இடம் பெயர்ந்து இன்னல் படும் மக்களையே இன்று எங்கும் காணக் கூடியதாகவுள்ளது. இடம் பெயர்வுகளால் மக்கள் உடல், உளரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்மராட்சியில் நல்ல பல சேவைகளை மக்களுக்கு வழங்கிய சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள் தாம் இடம் பெயர்ந்துள்ள போதிலும், கழகத்தினை மேம்படுத்தும் நோக்குடன் சேவையாற்றி வருவது பாராட்டப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வதேச லயன்ஸ் சழகங்களின் 306பீ. மாவட்டத்தின் முன்னாள் வடபிராந்திய தலைவரான லயன்.ஏ.தங்கேஸ்வரன்யாழ்ப்பாணம் கோவில்வீதியிலுள்ள யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தில் நடைபெற்ற புதிய ஆண்டுக்கான புதிய பதவியாளர்கள். பதவியேற்புவைபவத்தின் போது பிரதம விருந்தினராகப் பங்கொண்டு உரையாற்றினார்.

கழகத்தின் கடந்த ஆண்டுத் தலைவர் லயன் .எஸ். சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம விருந்தினரால் புதிய பதவியாளர்கள் பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டனர்.

பிரதம விருந்தினர் லயன். தங்கேஸ்வரன் அங்கு தொடர்ந்து பேசுகையில்:

சர்வதேச தலைமைக் காரியாலயத்தில் இருந்து பாராட்டு வெகுமதிகளையும், அடையாளங்களையும் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு கழகத்தினர் சேவையாற்றல் தவிர்க்கப்படல் வேண்டும். சேவைக்காக முன்வைக்கப்படும் அர்ப் பணிப்பும், தியாகமும் உயர் பதவியாளர்களால் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்; எனவும் குறிப்பிட்டார்;

கழகத்தின் புதிய தலைவராக லயன். கே. சற்குணதேவனும், செயலாளராக லயன். எஸ். சிவபாலசுப்பிரமணியமும், பொருளாளராக லயன். டாக்டர். எஸ். எஸ். அருளானந்தமும் கழகத்தின் இயக்குநர் சபையினால் தெரிவு செய்யப்பட்டு, நியமனம் செய்யப்பட்டனர்.

இவ்வைபவத்தில் லயன். டாக்டர். கே. ரீ. சிவபாதம், லயன். டாக்டர். பே. பிலிப்ஸ் ஆகியோர் ஆசியுரைகள் வழங்கினர். (க-77)

## மாதாந்த உதவிப் பணம்

(அச்சுவேலி)

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தபாலகங்களில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது. (உ-14)

## பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் தங்கியிருக்கும் க. பொ. த. (உ/த) பரீட்சைக்கு விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 18.07.2000 வியாழக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து வலிகாமம்கல்வி அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்; (4)

## வன்னிக்கு,

## அம்புலன்ஸ் வண்டி எடுத்துச்செல்லத்தடை வைத்தியசாலைகளில் பெரு நெருக்கடி

(வவுனியா)

வன்னிப்பகுதி வைத்தியசாலைகளுக்கென யுனிசெவ் நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் இரு மாதங்களாக வவுனியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது;

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கே இவ்வண்டிகள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் இரண்டு மாதங்களாக இவ்வண்டிகளை வன்னிப்பகுதிக்கு கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால், தொடர்ந்தும் மேற்படி வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வண்டித்தட்டுப்பாடு நிலவிவருகிறது;

இதனால் அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களை வேறு வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்வதற்கு தாமதம் ஏற்படுவதால் உயிரிழப்புக்களை எதிர்நோக்க வேண்டிய அபாய நிலை தோன்றியிருப்பதாகவும் தெரியவருகிறது. (உ-4)

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக்கோட்டத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களுக்கான பாராட்டுவிழா கடந்த சனிக்கிழமை இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் சு. துரைசிங்கம் (கவிஞர் துரையர்) செ. இராசவல்லவன், ஏ. முத்துக்குமாரசாமி பெ. அம்பலவாணர் ஆகியோரே பாராட்டி கௌரவிக்கப்பட்டவர்களாவர்;

வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஜெ. இருதயநாதன், உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்; [க]

# யாழ்ப்பாணத்தின் இந்துக்கல்வி பாரம்பரியம்

# ஓர் அறிவியல் ஆய்வுக் கண்ணோட்டம்

இந்துக்களின் சரித்திரம் முழுவதையும் உற்று நோக்கும் பொழுது அவர்களின் சிறந்த பண்பு அறிவைத் தேடுவதில் இருந்த ஆர்வமே ஆகும் என்பது தெளிவு.

இந்த அறிவு கடவுளைப் பற்றியும் இருக்கும், உலகியலைப் பற்றியும் இருக்கும் கல்விமான்கள் மிகவும் உயர்ந்த நிலையில் வைக்கப் பட்டு ஞானிகளைப் போல் வழிபடவும் பட்டனர்.

நமது முன்னோர், ஒருவனிடம் எவ்வளவு பொருள் இருந்தது என்பதைப் பற்றிக் கவலைப் படவில்லை. ஒருவனுடைய ஒழுக்கமுங் கல்வியுமே அவரை மக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் வணக்கத்துக்கும் உரியவன் ஆக்கியது.

இப்படியான ஒரு தேசத்தில் ஒப்பியல் முறையில் கல்வி முறைகளை ஆராய்ந்த அறிஞர்களின் மதிப்பைப் பெறும் ஒரு கல்வி முறையை அவர்கள் வகுத்தனர் என்பதில் ஒரு அதிசயமுமில்லை.

உலகப்புகழ் பெற்ற சர்வ கலாசாலைகளையும் இந்துக்கள் தாபித்தனர். பிராமணர் பிராமணப் பள்ளிக் கூடங்களையும், வைசியர் வைசியப் பள்ளிக்கூடங்களையும் தாபித்தனர். இங்கு அவ்வக் குலத்துக்குரிய தர்மசாஸ்திரங்கள் போதிக்கப்பட்டன.

இவற்றுக்கு மேலாக எல்லோருக்கும் பொதுவான பள்ளிக் கூடங்களும் அவற்றுக்குரிய ஆசிரியரும் இருந்தனர். கைத்தொழில்களும் வீட்டுப் பணிகளும் இளைஞர்களுக்குப் போதிக்கப்பட்டன;

### கீயின் கருத்து

வணக்கத்துக்குரிய கீ (Keay) என்பவர் தமது பண்டைய இந்தியக்கல்வி எனும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்:

''மகமதியக் கல்வி முறையைப் போல அதோடு பல முறைகளில் ஒத்திருந்த பிராமணக் கல்விமுறை ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படு முன் இருந்த கல்வி முறைக்குச் சற்றும் குறைந்ததல்ல. பிராமணக்கல்விமுறை ஏகாதிபத்தியங்களின் வீழ்ச்சிகளையும் சமுதாய மாற்றங்களை மீறி நின்று பிடித்ததோடு உலகம் போற்றும் சிந்தனையாளரையும் தோற்றுவித்தது.

பிராமணபௌத்தமகமதிய கல்வியோடு (இவை ஒரு சிலருக்கேபயன்பட்டது)கிராமங்களில் மக்களுக்கெனப்பொதுவான ஒருகல்வி முறைஇருந்து வந்திருக்கிறது. இக்கிராமப் பள்ளிக்கூடங்களில்வணிகருக்கும், விவசாயிகளுக்கும் தேவையான வாசிப்பு, எழுத்து, கணிதம் முதலிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

### போர்த்துகேய கல்விமுறை

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இங்கு நடைமுறையில் இருந்த கல்வி முறை இந்தியக் கல்வி முறையை ஒத்திருந்தது. போர்த்துக்கேயர் வருமுன் யாழ்ப்பாணத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட கோயில்கள் இருந்தன. இக்கோயில்களிலும் அவற்றைச் சேர்ந்த மடங்களிலும் சைவ நூல்களும் புராணங்களும் கற்றோருக்கும் கல்லாதவர்க்கும் பயன்படும் முறையில் போதிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பிராமணப் பள்ளிக் கூடங்களும் (இந்து சமயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது) கிராமப பள்ளிக் கூடங்களும்இருந்தன வைத்தியக் கல்வியும் அபிவிருத்தியடைந்திருந்தது. சித்திரம், கைத்தொழில், தொழில் முதலியன பரம்பரையாக தகப்பனால் மகனுக்குக் கற்பிக்கப்பட்டது. கவிஞர்களும் கல்விமான்களும் சிறந்து விளங்கினர் அரசகேசரி இரகுவமிசத்தையும் செகராசசேகரனும் பரராசசேகரனும் முறையே செகராசசேகரத்தையும் பரராசசேகரத்தையும் எழுதினர்.

1831ம் ஆண்டில் வெளிவந்த கேணக்கோல்புறாக் என்பவரின் அறிக்கையில் யாழ்ப்பாணத் தமிழர் தமது பழக்க வழக்கங்களையும் கல்வி முறையையும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்தனர் எனக் கூறியுள்ளார்.

### ஆங்கில ஆட்சியில் கல்வி

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியதும் தாங்கள் சமயங்கள் எல்லாவற்றையும் சமத்துவமாக நடத்துவதெனப் பிரகடனப்படுத்தினர். இந்துப் பள்ளிக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு பல்கிப் பெருகின இந்து ஆசிரியர்கள் வெளிப்படையாகத் தங்கள் கடமைகளைச் செய்தனர். ஆனால் இவர்களுக்குப் பல முட்டுக்கட்டைகள்இருந்தன. 1834 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 230 இந்துப் பாடசாலைகளும் 109 புரட்டஸ்தாந்துப் பள்ளிக் கூடங்களும்.

தமிழும் ஆங்கிலமும் 124 கத்தோலிக்கப் பள்ளிக் கூடங்களும் இருந்தன;

இக்காலத்தில் புரட்டஸ்தாந்து மிஷனரிமாருக்கே அரசாங்கத்தின் ஆதரவிருந்தது. அவர்களுடைய பள்ளிக் கூடங்களுக்கு மாத்திரமே பண உதவி கொடுக்கப்பட்டது;

யாழ்ப்பாணத்தில் மிஷனரிமார் ஆங்கிலப்பாடசாலைகளைநிறுவ நினைக்க யாழ்ப்பாண இந்துக்கள்பிராமணர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவ வேண்டும் என்றும் அப்படிச் செய்யாவிட்டால் இந்துக்கள் தொடங்கும் ஆங்கிலப் பாடசாலைக்கு நன்கொடை கொடுக்க வேண்டும் என்று மனுப்பண்ணினர்.

இதற்குப் பதிலாக அரசாங்கம் மிஷனரிமாரை யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப்பாடசாலையை நிறுவும் பொருட்டு அனுப்பியது.

இவர்களின் நோக்கம் இப்பாடசாலை மூலம் பிள்ளைகளைக் கிறிஸ்தவர்களாக்குவதே.

இச் சந்தர்ப்பத்தில் கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இடங்களில் இந்துக்களேமுதன் முதலில் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினர் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடையலாம்.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் இடுக்கண் மத்தியில்முன்னெடுக்கப்பட்டகல்வி முறையானது ஆறுமுக நாவலர் போன்ற சமயப் பிரச்சாரகர்கள் மற்றும் தமிழ்த்துறை சார்ந்த விற்பன்னர்கள் மற்றும் பிரசித்தி பெற்ற பாடசாலைகள் மூலம் வளர்ச்சி பெற்றதுடன் கல்வித்துறை சார்ந்த நிபுணர்கள் பலரையும் உருவாக்கியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(நன்றி: ஈழ நாடு-1986 ஆம் ஆண்டு)

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புலிகளுடனேயே பேச வேண்டும்

## த. வி. கூட்டணி தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் ஊடாக ஒரு தீர்வைக்காண அரசாங்கம் முன்வரவேண்டும்.

இவ்வாறு நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதிகாரப் பரவலாக்கல் குறித்து அரசும் ஐ.தே. கட்சியும் இணக்கம் கண்ட விடயங்கள் குறித்து த.வி. கூட்டணியினருக்கு ஜனாதிபதி நேற்று விளக்கமளித்தார்.

இதன் போது நாடு ஒற்றையாட்சியன்றி சமஷ்டியாக இருக்கவேண்டும், சர்வஜன வாக்கெடுப்பின்றி வடக்குக் கிழக்கு நிரந்தர இணைப்பாக இருக்கவேண்டும், பிராந்தியங்களுக்கு காணி அதிகாரம் அமையவேண்டும் என்ற மூன்று விடயங்களையும் விட்டுக்கொடுக்க முடியாது என்றும் அரசினதும் ஐ.தே.க.வினதும் இணக்கப்பாட்டில் இவை மாற்றப்பட்டுள்ளதாகவும் கூட்டணியினர் தெரிவித்ததுடன் தமது அதிருப்தியையும் தெரிவித்ததாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-வ)

### கொழும்புத்துறை...

இராணுவத்தினருக்கு உதவியாக ''கிபிர்'' விமானங்களும் எம்.ஐ. 24ரக உலங்கு வானூர்திகளும் பாதுகாப்பு வழங்கி குண்டுகளையும் துப்பாக்கி வேட்டுக்களையும் சரமாரியாக வீசித்தள்ளின.

இம்மோதலின் போது அரியாலை கொழும்புத்துறை பகுதிகளிலுள்ள புலிகளின் பதுங்குகுழிகளும் காவலரண்களும் அழிக்கப்பட்டதாகவும் புலிகள் வைத்த கண்ணிவெடிகளில் சிக்கி ஒரு அதிகாரி உட்பட 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 94 பேர் காயமடைந்ததாகவும்பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இம்மோதல்கள் நேற்று நண்பகல் வரை நீடித்ததாகவும், பல் குழல் எறிகணைகளும் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும், மோட்டார்பீரங்கித் தாக்குதல்களும் இடம் பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மோதல்களினால் இராணுவ வாகனங்கள் அடிக்கடி யுத்தமுனையில் இருந்து காயமடைந்தவர்களை பலாலி இராணுவ முகாமிற்கு ஏற்றிச்சென்றதையும் அவதானிக்க முடிந்தது. (வ)

### முன்னாள்...

நது.

வடபகுதி புனர்வாழ்வு அமைச்சர் சரத்அமுனுகம விடம் மாற்றுக்குழுவிலைச்சர்வதற்கான அங்கத்துவப்பத்திரத்தை இவர்கள் பெற்றனர்.

மேலும் பல ஐ.தே. கட்சி உறுப்பினர்களும் எம். பி. களும் தமது குழுவில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக சரத்அமுனுகம தெரிவித்துள்ளார். (ச-வ)

### யாழ்.குடா...

படுகிறது.

பதினொரு ஆண் உறுப்பினர்களும் இரு பெண் உறுப்பினர்களினதும் சார்பில்மகாகூட் மாநிலத்தின் 8 வது மாவட்ட காங்கிரஸ் சபை உறுப்பினர் ஜே. கப்புனோ இக்கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து50ஆயிரம்பேர்இடம் பெயர்ந்தவர்களாக உள்ளதோடு இவர்களில் பெரும் பகுதியினர் கோவில்களிலும பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர். (வ-ச)

### தொழில்நுட்பக்...

வடிவமைப்பில் தவறு ஏற்பட்டிருக்கலாம் என்று பொறியியல் வல்லுநர்குழு சந்தேகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மென் பொருள் நிகழ்ச்சி வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள தவறை சீர்செய்யும் பணியில் அமெரிக்க பொறியியல் வல்லுநர் குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் இத்தவறு விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்ட பின் தொலைத்தொடர்பு ஏற்படுத்தும் பணி சீரடையும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ். தொலைத்தொடர்புக் கோபுரம்அமைக்கும் பணிக்கு முக்கியமான உதிரிப்பாகங்கள் கிடைத்தவுடன் கோபுரம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று ரெலிக்கொம் உயர் அதிகாரி ஒருவர் ''வலம்புரி''க்குத் தெரிவித்தார். (வ-12)

### புலிகளுடன்...

ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது;

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு முன் ஆயுதங்களைக் களைய வேண்டுமென்று கேட்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று கடந்தகால அனுபவங்களில் இருந்து அரசு உணர்ந்துள்ளது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்து அப்பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் பட்சத்தில் அவர்கள் நிச்சயம் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் எனவும்.

தற்போது பேச்சுவார்த்தை நடத்தும் முடிவு விடுதலைப் புலிகளிடமே உள்ளது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். (வ)

### வீதியில்....

டன் இது பற்றி கலந்தாலோசிக்கவில்லை அத்துடன் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களின் கருத்துக்களும் பெறப்படவில்லை இவ்வாறான நிலையில் இந்நகலைத்திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் தாம் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்போவதாக மகாபூம்புத்ர கட்சியின் தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

இருதரப்புமட்டுமே பேசினால் போதாது சிங்கள மக்கள் அதனை விரும்புகின்றார்களா எனப் பார்க்க வேண்டும் அத்துடன் அரசியலமைப்பு திருத்தம் குறித்து அரசாங்கம் பேச்சு நடத்தும் தமிழ்க்கட்சிகள் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் இல்லை.

இந்நகல்த் திட்டம் குறித்து மகா சங்கத்தினருடனும் பேச்சு நடத்த வேண்டும்.

இதைவிடுத்து இச்சட்டமூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பித்தால் தாமும் வீதியில்இறங்கிப் போராடப் போவதாக சிங்கள உறுமயக் கட்சித்தலைவர் திலக்கருணாரெட்ன தெரிவித்துள்ளார் அத்துடன் இதற்கெதிராக தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் மேற்படி இரு கட்சிகளும் மேலும் தெரிவித்துள்ளன. (ச-வ)

### மோதல்களை...

வெடித்ததில் அப்பகுதியில் பதற்றம் நிலவியதுடன் மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர்.

நேற்று நண்பகல் வரை நீடித்த இம்மோதலின்போது யாழ். செயலக வளவில் பதற்றம் நிலவியதுடன் வழமையான நேரத்துக்கு முன்பே ஊழியர்கள் வீடுகளுக்குச் சென்றனர்.

இம்மோதல்களை அடுத்து யாழ். நகரிலுள்ள பாடசாலைகளும் மூடப்பட்டு மாணவர்கள் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (வ)

### இடம்பெயர்ந்த...

குத் தோற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக நேற்று யாழ் செயலகத்தில் அதிபர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் தங்கியுள்ள மாணவர்களை விட ஏனைய பகுதிகளில தங்கியுள்ள மாணவர்களுக்கு அந்தந்தப் பகுதியில் க.பொ.த. உயர் தர, 5ஆம் தர புலமைப்பரிசில பரீட்சைகளை எடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் விபரங்களை அந்தந்த வலயக் கல்விப்பணிப்பாளர்கள் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (வ)

### போலி...

யானை, இராசையா ரஞ்சராஜசேகரன் (வயது 36) அசுவேலி, செல்வராசா ஜெயக்குமார் (வயது 20) கோப்பாய், வன்னியசிங்கம் இந்திரகுமார் (வயது 19) கொடிகாமம், அரத்தினம் நாகராஜா (வயது 39) தாவடி, சூரியகுமார் கபிர்தன் (வயது 20) நவாந்துறை ஆகியோரே பொலிசாரினால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்களில் ஒருவரான வன்னியசிங்கம் இந்திரகுமார் க. பொ. த. உயர்தர பரீட்சையில் தோற்ற உள்ளதால் அவரை பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் ஏனைய ஐந்து பேரையும் விளக்கமறியலில்வைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச-7-2)

---

# அன்பு வாசகர்களே

நாளை புதன்கிழமை
வலம்புரியில்
வழமை போல் 5 ஆம் தரமாணவர்களின்

## புலமைப்பரிசில்

வினா விடையும் அதியுயர் புள்ளி பெற்ற மாணவர்களின் பெயர் விபரமும் வெளிவரும்.

குறிப்பு:-

தொடர்ந்து ஒவ்வொரு புதன்கிழமையும் வழமை போல் புலமைப்பரிசில் வினாவிடை வெளி வரும்.

எதிர்வரும்
வெள்ளிக்கிழமை பொது அறிவு
(வினா - விடை)

தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமைகளில் எதிர் பாருங்கள்

---

## தவறிவிட்டது

செல்வி மேரிஷாமினி தேவதிரவியம் என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 796572574V, விசேட அடையாள அட்டை இல. 09193853, பல்கலைக்கழக அடையாள அட்டை இல. 98/DGV/28 இம் மூன்றும் ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(இ-642)

---

வெங்காயம், புகையிலை

# திருகோணமலைக்கு அனுப்புவோர் கவனத்திற்கு

வெள்ளி 14-7-2000 அன்று பொருட்கள் ஏற்றப்படும்.

வெங்காயம், புகையிலை மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ''பொல் கொட'' கப்பலில் திருகோணமலைக்கு அனுப்ப விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும் இம்முறையும் வெங்காயம் பெட்டிகளில் ஏற்றவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு

## ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2407 தொலை நகல்: 2140

(இ/640)

---

யாழ்ப்பாணத்திலிருந்து
யாழ்ப்பாண பொருட்களைக் கொழும்பிற்கு

# குமண கப்பலில் அனுப்புவோரது கவனத்திற்கு

யூலை மாத இரண்டாம் கிழமை அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குமண கப்பல் கொழும்பிற்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே லங்கா முடித கப்பலிற்குப் பதிவு செய்தவர்களும், இக்கப்பலில் பொருட்களைக் கொண்டுசெல்ல விரும்புபவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

- இங்கிருந்து அனுப்பும் பொருட்களின் பெயர் அதன் அளவு போன்ற விபரங்களையும் அத்துடன் பொருட்களைப் பொறுப்பேற்க அமர்த்தியுள்ள முகவரின் விபரங்களையும் செயலக புனர்வாழ்வுப்பகுதியில் சமர்ப்பிக்க வேண்டும்;
- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பழுதடையக் கூடிய பொருட்களுக்கு கப்பல் கட்டணம் இல்லை. எனினும் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். அத்துடன். கொழும்பு துறைமுக இறக்கற்கட்டணம் ஒரு மெ. தொன்னிற்கு 4டொலர்கள் வீதமும்பொருட்கள் ஏற்றும்போதே செலுத்தப்பட வேண்டும்.
- பழுதடையாத உற்பத்திப் பொருட்களிற்கு ஒரு CBM/MT இற்கு 25% கப்பல் கட்டணமும் அத்துடன் பொருட்களை பருத்தித்துறை துறைமுகத்தில் ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களையும் செலுத்த வேண்டும். அத்துடன் கொழும்பு துறைமுக இறக்கற்கட்டணம் ஒரு மெ. தொன்னிற்கு 4 டொலர் வீதமும் பொருட்கள் ஏற்றும் போதே செலுத்தப்பட வேண்டும்.

எனவே பொருட்களை ஏற்ற விரும்புபவர்கள் பொருட்களின் விபரம், சரியான அளவையும் குறிப்பிட்டு யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்

(இ-641)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச்சகத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!